# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 69 — 1973 ජූලි 20 වැනි සිකුරාදා — 1973.07.20

69 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு யூலை மாதம் 20 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்வதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 721 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 726 | ஏலவிற்பனைகள் | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் | — | நானாவித அறிவித்தல்கள் | 726 |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

### சிறு கைத்தொழிற்றிணைக்களம்

கொழும்பு, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக் களத்தின் கேள்விச் சபைத் தலைவர் 1973.8.9 ந் திகதி காலை 10 மணி வரை மேற்படி திணைக்களத்தின் கீழ் உள்ள "லக்சல" வுக்கு அச்சிடப்பட்ட கடதாசி உறைகளை விநியோகம் செய்வதற்கான கேள்விகளைப் பெற்றுக் கொள்வார்.

2. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்புவோர் ரூபா 25 ஐ வைப்புப் பணமாகச் சிறு கைத்தொழிற்றிணைக்களத்திற் செலுத்தி, 1973.8.8 ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(5/31)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.07.09.

7–637—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

### ஆள்புல வேலைகள் அமைப்பு, வடமாநிலம்

வவுனியா வடமாநில வேலைகள் பணிப்பாளர் அலுவலக கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைக்கு கேள்விப்பத்திரங்கள் 1973 ஆகஸ்ட் மாதம் 7 ம் திகதி காலை 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, உடன் திறக்கப்படும்.

தொண்டமனாறு நீர் கடவைக்கு மரக் கதவுகள்
அமைத்தலும், பொருத்துதலும்

2. ரூபா 40,000 க்கும், அதற்குக் கூடிய தொகைக்கும் நீர்ப் பாசன, பெருந்தெருக்கள், கட்டிடம், ஆள்புல வேலைகள் அமைப் பில் பதிவு செய்யப்பெற்ற ஒப்பந்தக்காரர்களும், பிரபல்யமான வர்த்தக நிறுவனங்களும் இக் கேள்விப் பத்திரங்களை சமர்ப்பிக்க தகுதியுடையவராவர். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத் திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவற்றின் பெறுமதிகளையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி பருத்தித்துறை நிறைவேற்று பொறி யியலாளருக்கு அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

3. 1973 ஆகஸ்ட் மாதம் 3 ம் திகதி பி. ப. 2.00 மணி வரை பருத்தித்துறை நிறைவேற்றுப் பொறியியலாளரின் அலுவலகத் தில் பெற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திரங்களில் இரண்டு பிரதிகளில் மேற்படி கேள்விகள் அனுப்பப்படுதல் வேண்டும். பருத்தித்துறை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் ரூபா 50.00 ஐ கேள்வி வைப்பு பணமாக செலுத்தியும் அல்லது

---

### முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக் கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத் திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

வேறு எந்தக் கச்சேரியிலும் ரூ. 50.00 ஐ கேள்வி வைப்புப் பணமாக செலுத்தியதற்கு தரப்பட்ட பற்றுச்சீட்டை காண்பித்தும் கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

4. கேள்விகள் இரு பிரதிகளில், வடமாநில வேலைகள் பணிப்பாளர் அலுவலக கேள்விச் சபையின் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். கேள்விகளை உட்கொண்டிருக்கும் கடித உறையின் இடது மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

5. மேற்படி வேலைக்கான வரை படங்களையும் வேறு விபரங்களையும் பருத்தித்துறை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. தியாகராசா,
நிறைவேற்றுப் பொறியியலாளர்,
பருத்தித்துறை.

நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம்,
ஆள்புல வேலைகள் அமைப்பு,
பருத்தித்துறை.

7-657—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

### கச்சேரி, வவுனியா

கீழ்க்காணும் திருத்த வேலை சம்பந்தமாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரால் 1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ந் திகதி பி. ப. 2.30 மணிவரைக்கும் தனித் தனியே முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கல்மடு பீ. ஓ. பீ. றோட்டுத் திருத்த வேலை—¾ மைல் நீளம்.
2. ஒட்டைச்சாளம்பைக்குளம் றோட்டு அமைத்தல்—1 மைல் நீளம்.
3. பிரப்பமடுவ பீ. ஓ. பீ. றோட்டுத் திருத்த வேலை—¾ மைல் நீளம்.
4. மகாகச்சக்கொடிய பீ. ஓ. பீ. றோட்டில் மதவு அமைத்தல்.

2. வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் (காணிக்கிளை) பெற்றுக்கொண்ட கேள்விப் பத்திரங்கள் (இரு பிரதிகளும்) நிரப்பி அனுப்புதல் வேண்டும். இவ்வேலைகள் சம்பந்தமாக மேலதிக விபரங்களை வவுனியா அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்கள் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10 ஆந் திகதி பி. ப 2.00 மணிவரையும் வழங்கப்படும்.

4. அரசாங்க அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும், பயிர்ச் செய்கைக் குழு ஆகிய அனுமதிக்கப்பட்ட சங்கங்களும் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவராவர். வெற்றுக் கேள்விப் பத்திரங்கள் இக் கச்சேரியில் ரூபா 25 (ஒவ்வொரு வேலைகளுக்கு) கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டு காட்டுபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். கிராம முன்னேற்றச் சங்கங்களும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கட்டுப்பணம் செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்கள்.

அ. ம. ம. குலநாயகம்,
மாவட்ட காணி உத்தியோகத்தர்,
வவுனியா மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

வவுனியாக் கச்சேரி,
29.06.1973.

7-532—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல.69

---

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவுக்கு திருகோணமலை அபிவிருத்தி வேலைநிலையத்தில் 200 கியூப் 1½" உடைகல், 200 கியூப் ¾" உடைகல், 100 கியூப் ½" உடைகல், 200 கியூப் ஆற்றுமணல் வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1973.08.10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

1973.08.10 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புக் கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியின் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100 கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1973.08 08 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

எஸ். எம். பி. தொலபிஹில்ல,
பதில் கப்பற்றுறை ஆணையாளர்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
20.07.1973.

7-663—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

### பொலிசுத் திணைக்களம்

உள்ளூரிலேயே பெற்றுக் கொள்ளக் கூடிய மூலப் பொருட்களால் தயாரிக்கப்பட்ட இடுப்புப்பட்டித் தகடுகள், தொப்பி இலச்சினைகள், போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர் இலச்சினைகள், பொத்தான்கள் முதலியவற்றை வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 1, பொலிசுத் தலைமையலுவலகத்தின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் 1973, ஓகஸ்ற் மாதம் 10 ஆம் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்களைத் திறப்பதற்கான மேலே குறிப்பிடப்பட்ட நேரத்தில் கேள்விப் பத்திர விண்ணப்பதாரர் சமுகமயிருக்க அனுமதிக்கப்படுவர்.

3. கொழும்பு 1, பொலிசுத் தலைமையலுவலகத்தில் பொலிசுத் தலைவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் அளிக்கப்பட வேண்டும். மாதிரிப் (சாம்பிள்) பொருட்கள் சாதாரண அலுவலக நேரங்களில், கொழும்பு 1, பொலிசுத் தலைமை அலுவலகத்தில் பார்வையிடலாம்.

4. கேள்விப் பத்திர கட்டுப்பணமாக ரூ. 100 செலுத்தி அதற்குரிய சிட்டையைக் காட்டி 1973, ஓகஸ்ற் மாதம் 9 ஆம் திகதி மத்தியானம் 12.00 மணிவரை கேள்விப் பத்திர விண்ணப்பப் படிவங்களை பெற்றுக் கொள்ளலாம். கட்டுப்பணத்தைப் பொலிசுத் தலைமையலுவலகத்திலாயினும் அல்லது கொழும்புக்கு வெளியே உள்ள எந்தக் கச்சேரியிலாயினும் செலுத்தலாம்.

5. மாதிரிகள் (சாம்பிள்) சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவை கேள்விப் பத்திரங்கள் திறப்பதற்கான நேரத்திற்கு முன்னரே கேள்விப்பத்திர விண்ணப்பதாரரின் பெயர், விலாசம் இடப்பட்டு பொலிசுத் தலைமையலுவலகத்தில் கையளிக்கப்படல் வேண்டும்.

6. மேற்கொண்டு விபரங்களை பொலிசுத் தலைவரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஜீ. புஞ்சிமஹத்மயா,
பொலிஸ் மா அதிபருக்காக.

பொலிசுத் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
1973.7.5.

7-570—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

### கேள்விப்பத்திர அறிவித்தல்

கொழும்பு 7, பௌத்தலோக மாவத்தை, 363 ஆம் இலக்கத்தில் உள்ள இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகத்தில் விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிடமொன்றைக் கட்டுவதற்கான கேள்விப் பத்திரங்கள், மேற்படி நிறுவகத்தினது பணிப்பாளரினல், ஏற்றுக்கொள்ளப்படும்.

விலேகேள்வு ஆவணங்களினது முதலிரு பிரதிகளுக்கு மீளப் பெறப்பட்ட முடியாத் தொகையாக ஐம்பது ரூபாவும் மேலதிகப் பிரதியொவ்வொன்றுக்கும் மீளப்பெறப்படமுடியாத் தொகையாக இருபத்தைந்து ரூபாவும் சேர்த்து மீளப் பெறக்கூடிய கேள்விப் பத்திர வைப்புத் தொகையாக நூறு ரூபாவைச் செலுத்தியதன் மேல். கொழும்பு 2, டபிள்யு. ஏ. டி ரூமநாயக்க மாவத்தை, 120 ஆம் இலக்கத்திலுள்ள அரச எந்திரவியற் கூட்டுத்தாபனத்தினது உசாத்தொகுதி முகாமையாளர் அலுவலகத்தில் 1973 ஜூலே 23 ஆந் தேதி திங்கட்கிழமை தொடக்கம் ஆகஸ்ட் 1 ந் தேதி புதன்கிழமை வரை, கேள்விப் பத்திர ஆவணங்கள் வழங்கப்படும். விலேகேள்வு ஆவணங்களுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றுடனும் காசு அல்லது அரச எந்திரவியற் கூட்டுத்தாபனத்தின்பேரில் எழுதப்பட்ட காசோலே அல்லது காசுக்கட்டளே சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள், கொழும்பு 7, பௌத்தலோக மாவத்தை, 363 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை விஞ்ஞான, கைத்தொழில் ஆராய்ச்சி நிறுவகத்தினது பணிப்பாளர் அலுவலகத்தில் 1973 ஆகஸ்ட் 8 ஆந் தேதி புதன்கிழமையன்று காலே 10.00 மணிக்கு முடிவடைந்து, அதன்மேல் உடனடியாகத் திறக்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள், ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்தினது அல்லது கூட்டுத்தாபனத்தினது பதிவு செய்யப்பட்ட கட்டிட ஒப்பந்தகாரரிடமிருந்து மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். அத்துடன் இவ்வொப்பந்தக்காரர்கள் 5,00,000 ரூபாவுக்கு மேற்பட்ட கட்டிட வேலேகளுக்கெனப் பதிவு செய்யப்பட்டவர்களாயிருத்தல் வேண்டும்.

மேலும் விபரங்களே, கொழும்பு 2, டபிள்யு. ஏ. டி. ரூமநாயக்க மாவத்தை, 120 ஆம் இலக்கத்திலுள்ள அரச எந்திரவியற கூட்டுத்தாபனத்தினது உசாத்தொகுதி முகாமையாளர் அலுவலகத்தில், பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர்,
இ. வி. கை. ஆ. நி.

பணிப்பாளர் அலுவலகம்,
இ. வி. கை. ஆ. நி.,
363, பௌத்தலோக மாவத்தை,
கொழும்பு 7.

7-617—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

### நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலேகள் அமைச்சு

வெற்றுத்தார்ப் பீப்பா, வெற்று உருக்குப் பீப்பா, வெற்று சீமெந்துப் பை வாங்குவதற்கும் எடுத்துச் செல்வதற்குமான கேள்விப் பத்திரம்

நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலேகள் அமைச்சின் ஆள்புல சிவில் பொறியியல் அமைப்பின் கீழுள்ள வட மத்திய பிராந்திய அலுவலகக் கேள்விச்சபைத் தலேவர் அவர்களால்

(1) வெற்றுத் தார்ப் பீப்பா,

(2) வெற்று உருக்குப் பீப்பா,

(3) வெற்றுச் சீமேந்துப் பை,

ஆகியவற்றை வாங்கவும், எடுத்துச் செல்லவும் இலங்கையரிடமிருந்தும், இலங்கையர் தாபனங்களிடமிருந்தும் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் 21.8.1973 அன்று முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். யாழ்ப்பாணம், வவுனே, திருகோணமலே கச்சேரிகளிலோ அல்லது எந்தவொரு நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலேகள் அமைச்சின் ஆள்புல சிவில் பொறியிடல் அமைப்பின் கீழுள்ள பிராந்திய அலுவலகத்திலோ, கேள்விப் பத்திரக் கட்டுப் பணமாக ரூபா 100/-ஐ செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டினைச் சமர்ப்பிக்குமிடத்து, கந்தோர் நேரங்களில் 20.8.73 அன்று வரைக்கும் கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

3. கேள்விப் பத்திரங்கள் 21.8.73 பிற்பகல் 2 மணிக்கு வட மத்திய பிராந்திய வேலேகள் பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் சமயம் கேள்விப் பத்திரதாரர்கள் அவ்விடயத்தில் சமுகமளிக்க முடியும்.

4. இவ் ஒப்பந்தங்கள் 31.12.73 வரை நீடிக்கும்.

5. மேலதிக விபரங்கள் அனுராதபுரம் வடமத்திய பிராந்திய வேலேகள் பணிப்பாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜீ. எஸ். விக்கிரமசிங்க,
வடமத்திய பிராந்திய வேலேகள் பணிப்பாளர்.

வடமத்திய வேலேகள் பணிப்பாளர் அலுவலகம்,
அனுராதபுரம்.
6.7.1973.

7-676—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு-5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப் பத்திரச் சபைத் தலேவர், 1973 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 8 ஆம் தேதி மு. ப. 10.00 மணிவரை பின்வரும் வேலேகளுக்கான வேருன பொறியிட்ட கேள்விப் பத்திரங்களே ஏற்றுக்கொள்ளுவார்.

| விவரணம் | ஒப்பந்தகாரர்களின் ஆகக் குறைந்த பதிவுத் தொகை |
|---|---|
| 1. கல்கிசை, பீரிஸ் வீதியில் சேட்டு யந்திரத் தலம் (சொப்) அமைத்தல் ஈ. சி/550 ... ... | ரூபா 50,000.00 |
| 2. மொறட்டுவை வசு நிலேயத்தில் மண் நிரப்புதலும் மட்டமாக்கலும் ஈசி/551 ... .. | 25,000.00 |
| 3. ஹசலக்காவில் இடத்தை அகழ்தலும் மட்டமாக்கலும் ஈசி/504 .. | 25,000.00 |

பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய பத்திரங்களில், கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்பட வேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களேயும் பெற்றுக்கொள்வதுடன் இவரின் அலுவலகத்தில் படவரைவுகளேயும் பரிசீலனே செய்யலாம். ஒவ்வொரு வேலேக்கும் எதிராகக் காட்டப்பட்ட தொகைக்காக இ. போ. ச. வில், அரசாங்கத் திணைக்களங்களில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தேவையான கேள்விப் பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக 1 ஆம், 2 ஆம், 3 ஆம் விடயங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூபா 100/- க்கும் ஆன மீளளிக்கப்படக் கூடிய கேள்விப்பத்திர கட்டுப்பணப் பற்றுச் சீட்டையும் மீளளிக்கப்படமாட்டாத கேள்விப்பத்திரக் கட்டணமாக 1 ஆம், 2 ஆம், 3 ஆம் விடயங்களுக்கு ஒவ்வொன்றுக்கும் ரூபா 25 க்கும் ஆன பற்றுச்சீட்டையும் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7 ஆம் தேதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது முன்னதாக பிரதம சிவில் பொறியியலாளருக்கு காட்டுவதன்பேரில் கேள்வியிடத் தகவுடையவர்களாயிருப்பார்கள். கேள்வியிடுபவர்கள் தங்களது சான்ருேலேகளேப் பரிசோதனேக்குக் காட்ட வேண்டும். அவ்வித சான்ருேலேகள் பிரதம சிவில் பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே கேள்விப்பத்திரக் கட்டுப் பணத்தை காசாக மாத்திரம் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டலாம்.

பிரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு-5,

7-745—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

### காணி அபிவிருத்தித் திணைக்களம்

2000 கலன் எரிபொருள் தேக்கி வைக்கக் கூடிய 4 உருக்குத் தாங்கிகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்

மேற்குறிப்பிட்ட சேவை தொடர்பான கேள்விப் பத்திரங்களை 1973.08.10 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிவரை காணி அபி விருத்தி அதிபர் ஏற்றுக்கொள்ளுவார்.

2. கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம் : (அ) முன்னைய இருப்பு இருலப்பனை மத்திய வேலைத் தளத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் முந்திய விநியோகக் காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50 கட்டுப் பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியி லுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி 1973.08.09 நண் பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1 காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிட மிருந்து பெறக் கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப் பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடி வடைய முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் "2000 கலன் உருக்குத் தாங்கிகள் 4 வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள்" எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முக வரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முக வரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப் பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமான பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல் லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்கா ளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப் பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்ற முடியாத வையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்பு நோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்க ளுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங் களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக்காட்ட வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெற முடியாது தவறிய கேள் விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத் தித் திணைக்களத்தில் 1973.08.10 ந் திகதி முற்பகல் 11.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக் கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றை யேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத் திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறி யியலாளர் காணி அபிவிருத்தித் திணைக்களம், கொழும்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1973.07.10.
சீரீ/2/457

7-750—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

தேவை

(1) ¼ அவுன்ஸ் பிரிவுகள் கொண்டதும், 16 அவுன்ஸ் (1 இரு %) திறன் கொண்டதுமான இரண்டு எண்ணிக்கை கொண்ட எண் ணல் தராசுகள் (அஞ்சல் தராசு 1104 போன்றது).

(2) ¼ இரு. பிரிவுகள் கொண்டதும், 0 முதல் 150 இருத்தல் வரையிலான எல்லை கொண்ட இரண்டு எண்ணிக்கை கொண்ட "பாத்றூம்" நிறுக்கும் தராசுகள் (இரட்டைத் தரப்படுத்தல்கள்).

மேற்கூறியவற்றை வழங்கிக் கொள்வதற்குப் பொறியிட்ட கூறு விலைகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கேள்விச் சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கூறுவிலைகள், 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 7 ஆந் தேதி காலை 10.00 க்கு முன்னதாக கீழ்க் கையொப்பம் இட்டுள்ளவரின் அலு வலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் போடப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், உறை யின் இடதுபக்க மேல் மூலையில் "தராசுகள் வழங்குவதற்கான கூறுவிலை" என்று குறிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

வழங்கல்கள் பண்டசாலை முகாமையாளர்.

113, காலி வீதி,
கொழும்பு-3.

7-739—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல். 69

---

### தி. பெ. வா. அமுக்கக் கலன்களையும், மைய நோக்கப் பம்புகளை யும் வழங்கிக் கொள்வதற்கான கேள்வி

மேற்கூறியவற்றிற்கான கேள்வி 1973 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ஆம் திகதி காலை 10.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது. கேள்வி முறைகளுக்கமைய, கேள்விகள் தி. பெ. வா. அமுக்க கலன்களுக்கு மட்டுமே கோரப்படுகின்றதே அன்றி மைய நோக்க பம்புகளுக்காக அல்ல என்பதைக் கவனித்துக் கொள்ளவும்.

பண்டசாலை வழங்கல்கள் முகாமையாளர்.

113, காலி வீதி,
கொழும்பு-3.

7-695/1—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

### இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

தேவை

உபயோகித்த 15-20 தொன் கொள்ளளவு கொண்ட நிறுக்கும் பாலம்

மேற்கூறியவற்றை வழங்கிக் கொள்வதற்குப் பொறியிட்ட கூறு விலைகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கேள் விச் சபைத் தலைவரினால் கோரப்படுகின்றன.

கூறுவிலைகள் 1973 ஆகஸ்ட் 3 ஆந் தேதி காலை 10.00 மணிக்கு முன்னதாக கீழ்க் கையொப்பமிட்டுள்ளவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியினுள் போடப்பட்டிருத் தல் வேண்டும் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப் பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உபயோகித்த நிறுக்கும் பாலத்தை வழங்கிக் கொள் வதற்கான கூறுவிலை" என்று குறிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

பண்டசாலை வழங்கல்கள் முகாமையாளர்.

113, காலி வீதி,
கொழும்பு-3.

7-695/2—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### இரண்டு மின் ஆடலாக்கிகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள்

மேற்குறிப்பிட்ட சேவை தொடர்பான கேள்விப் பத்திரங்களைக் காணி அபிவிருத்தி அதிபர் 1973.08.10 ஆந் திகதி முற்பகல் 11.00 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

எண்ணிக்கை 2—3 பேஸ் 400/230 வோல்ற்ஸ், 4 வயர் ஏசீ. 15 முதல் 20 கிலோவாட்ஸ், சுவிற்ச் பலகையுடன்.

(அ) பொருத்தமான வோல்ற் மீட்டர்.

(ஆ) அமீற்றர்—3.

(இ) பியூசுடன் கூடிய 3 பேஸ் சார்க்கியூட் பிறேக்கர்.

இயக்குநர் கைநூல், நிறுவுதல், கொள்ளுதல் ஆகியவற்றிற்கான அறிவுறுத்துரைகள் தனியான கடித உறையில் மேற்பார்வைப் பொறியியலாளர், த. பெ. என். 529, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

2. கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம். முன்னைய இருப்பு, கிருலப்பனை மத்திய வேலைத்தலத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் முந்திய விநியோகக் காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி, 1973.08.09 ந் தேதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டை கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப் பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையு முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " இரண்டு ஆடலாக்கிகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள், நிமிடத்திற்கு 40 கலன் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்க கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக் கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக்காட்ட வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர்கள் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெற முடியாது தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1973.08.10 ந் திகதி நண்பகல் 11 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர்கள் சமுகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்மாயின் மேற்பார்வைப் பொறியியலாளர் காணி அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1973.07.09.
சீரீ/2/456.

7-749—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

### சிங்கள, தமிழ் உயர்வகுப்புப் பாடநூல்களை அச்சிட்டுக் கல்வி வெளியீட்டு ஆணையாளருக்கு வழங்குதல்

1. உயர் வகுப்புகளுக்குரிய,

(i) 23 சிங்களப் பாடநூல்களையும்
(ii) 16 தமிழ்ப் பாடநூல்களையும்

அச்சிட்டு வழங்குவதற்குரிய கேள்விப்பத்திரங்களை, **25 ஓகத்து 1973 மு. ப. 9.00 மணி வரை,** பொறிமுறை அல்லது ஒளிப்படக் கோவை இயந்திரம், அல்லது பொறிமுறைக் கோவை இயந்திரமும் ஒளிப்படக் கோவை இயந்திரமுமுள்ள அச்சக உரிமையாளரிடமிருந்து தலைவர், கேள்விப்பத்திரச் சபை, ஒலிபரப்புத் தகவல் அமைச்சு, இல. 7, சேர் பாரொன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு ஏற்றுக் கொள்ளுவார். ஒவ்வொரு நூலுக்கும் தனித் தனியே வீதங்கள் கொடுக்கப்படல் வேண்டும்.

2. கேள்விப்பத்திரங்களைத் திறக்கும் பொழுது கேள்விப் பத்திரக்காரர் அல்லது அவருடைய பிரதிநிதியொருவர் பிரசன்னமாக இருக்க அனுமதிக்கப்படுவர். **கேள்விப் பத்திரங்கள் மேலே குறிப்பிடப்பட்ட தேதியன்று குறிப்பிட்ட நேரத்திலே அமைச்சின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவருடைய அலுவலகத்திலே திறக்கப்படும்.**

3. கேள்விப் பத்திரங்கள், பொது விவகார அலுவலகம், அரசாங்க அச்சுத் திணைக்களம், 118 பேஸ்லையின் ரோட், கொழும்பு 8 எனும் முகவரியிற் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களிலே இருத்தல் வேண்டும். **இந்தப் படிவங்களிலே இல்லாத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. படிவத்திலே கேட்கப்பட்டிருக்கும் எல்லா விபரங்களும் ஏற்றவாறு நிரப்பப்படல் வேண்டும்.**

4. நூலொன்றுக்கு ரூ. 25 வீதம் கட்டுக்காசு கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைக் காண்பித்துக் கந்தோர் நேரத்தில் மு. ப. 9.30 மணியிலிருந்து பி. ப. 2.30 மணிவரை நிபந்தனைகளையும் விபரங்களையும் கொண்டுள்ள கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரத்துக்குரிய கட்டுக்காசு 118, பேஸ்லையின் ரோட், கொழும்பு 8 எனும் முகவரியிலுள்ள அரசாங்க அச்சக அதிபதியின் அலுவலகத்திலே கட்டுப்படல் வேண்டும்.

5. **அரசாங்க அச்சக அதிபதியுடன்** முன்னரே ஒழுங்கு செய்து சனிக்கிழமைகள் தவிர்ந்த ஏனைய வேலை நாட்களிலே புத்தகங்களின் எழுத்துப் பிரதிகளைப் பார்வையிட்டுக் கொள்ளலாம்.

6. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் இரண்டு பிரதிகளில் இருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அடங்கிய உறையின் இடதுபக்க மேல் மூலையில் **" உயர் வகுப்புப் பாடநூல்களை அச்சிட்டு வழங்குவதற்குரிய கேள்விப்பத்திரம் "** என்று எழுதப்படல் வேண்டும். எல்லா உறைகளும் மெழுகிட்டு ஒட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

7. கேள்விப் பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படலாம். அவ்வாறு அனுப்புவதற்கு விரும்பாத கேள்விப்பத்திரக்காரர் தாமாகவோ அல்லது தமது பிரதிநிதியொருவர் மூலமாகவோ கேள்விப் பத்திரத்தை (6 ஆம் பிரிவிலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களும் கேள்விப் பத்திரக்காரருடைய பெயர், விலாசம் ஆகியனவும் மெழுகிட்டொட்டிய உறையிற் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்) அமைச்சுக் கேள்விப்பத்திரச் சபைத் தலைவரிடமோ அல்லது கேள்விப் பத்திரங்களை ஏற்று ஒப்புக் கொள்ளுவதற்குரிய அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரிடமோ நேராக ஒப்படைக்கலாம்.

8. மேலும் தகவல்கள் வேண்டுமெனின் அரசாங்க அச்சக அதிபதியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எல். டபிள்யு. பீ. பீரிஸ்,
அரசாங்க அச்சக அதிபதி.

7-683—20.07.73 ந் திகதி வர்த்தமானி இல. 69

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

**ஸ்ரீ லங்கா பொலிஸ் பகுதி**

மாவட்டக்களஞ்சியம்—மாத்தளை

**பாவனைக்கு உதவாத பொருட்களின் விற்பனை**

*1973 ம் ஆண்டு ஜூலை மாதம் 26 ம் திகதி காலை 9 மணிக்கு பின்வரும் பாவனைக்கு உதவாத பொருட்கள் மாத்தளை மாவட்டக் களஞ்சியத்தில் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

அட்டவணை

1. ஒரு ஆயுதம் தாங்கி
2. மூன்று சைகை காட்டி விளக்குகள்
3. இரு றப்பர் திகதி முத்திரைகள்
4. ஒரு ஸ்திரிகைப் பெட்டி
5. எண்பத்தொரு பழைய சட்ட நூல்கள்
6. இருபத்துமூன்று அலுமினியத் தட்டுக்கள்
7. பதின்மூன்று பூட்டுக்கள்
8. ஒரு பெட்ரோல் மாக்ஸ்
9. முப்பத்தொன்பது மெத்தைகள்
10. ஒரு மின்கேத்தல்
11. இருபத்தொரு புகைபடச்சுருள்கள்
12. நான்கு அச்சுத்தாள்கள்.

மேற்குறிப்பிட்ட பொருட்கள் விற்பனைக்குரிய தினத்தில் காலை 8.00 மணி முதல் பார்வையிடலாம்.

ஏலத்தில் கோரப்பட்ட பொருட்கள் அதே தினத்தில் முழுத் தொகையையும் செலுத்தி அகற்றப்பட வேண்டும்.

ஜே. ஏ. பண்டாரநாயக்கா,
உதவிப் பொலிஸ் அதிபர், மாத்தளை.

பொலிஸ் காரியாலயம்,
மாத்தளை,
22.6.73.

7-571—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

**ஏல விற்பனை**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

*பரீட்சைத் திணைக்களத்துக்குச் சொந்தமான (36" × 18") பிரமாணத்தையுடைய 790 சிறு சாக்குகள் ஜூலை மாதம் 30 ந் திகதி பிற்பகல் 2 மணிக்கு திணைக்களத்தின் வழங்கற் கிளையிலே ஏல விற்பனை மூலம் விற்கப்படும்.*

இச்சாக்குகளை ஏல விற்பனை ஆரம்பமாகு முன்பு பரிசோதனை செய்து பார்க்கலாம்.

வாங்கப்பட்ட சாக்குகளுக்கான கொடுப்பனவு உடனடியாகக் கட்டப்பட்டு அவை எடுத்துச் செல்லப்படல் வேண்டும்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு 2,
1973.07.04.

7-642—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

---

# நானாவித அறிவித்தல்கள்

**விஞ்ஞானக் கல்விக்குரிய துணைவாசிப்பு நூல்களைக் கொள்வனவுசெய்தல்**

பள்ளிக்கூட மாணவர்களுக்கான விஞ்ஞானத் துணை வாசிப்பு நூல்களை வெளியிடுவோருக்கு ஊக்கம் தரும் பொருட்டு அத்தகைய நூல்களைக் கொள்வனவு செய்வதற்கான ஓர் ஒழுங்கினை அரசாங்கம் அங்கீகரித்துள்ளது. இதற்கென நியமிக்கப்படும் ஒரு செயற்குழு தக்கவையெனத் தேர்ந்தெடுக்கும் நூல்களுள் ஒவ்வொன்றிலும் ஆயிரம் (1000) இற்கும் அதிகமாகாத பிரதிகளை 1973 டிசெம்பர் 31 இல் முடிவடையும் நிதியாண்டிற் கொள்வனவு செய்வதென உத்தேசிக்கப்பட்டுள்ளது. நூல்களைப் பரிசீலித்துத் தேர்ந்தெடுப்பதற்கான வெளியீட்டாளர் அவற்றை 1973 செப்ரெம்பர் 1 ஆம் தேதியிலிருந்து 1973 செப்ரம்பர் 30 ஆம் தேதி வரையுள்ள காலத்துள் என்னிடம் சமர்ப்பித்தல் வேண்டும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

2. அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் நூல்கள் :—

(i) சிங்களத்தில்/தமிழில் எழுதப்பட்ட அல்லது மொழிபெயர்க்கப்பட்ட மேலதிக வாசிப்புத் துணை நூல்களாக இருத்தல் வேண்டும் ;

(ii) 1973 ஒகஸ்து 1 ஆம் தேதிக்கு முற்பட்ட மூன்றாண்டுக் காலத்துள் முதன்முதலாக வெளியிடப்பட்டனவாகவும், 1.10.73 இற்கு முற்பட்ட இரண்டு ஆண்டுக் காலத்துள் கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனைச் சபை துணை வாசகங்களென அங்கீகரித்த புத்தகங்களாகவும் இருத்தல் வேண்டும். (மேற்சொன்ன காலப்பகுதியில் கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனைச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் அங்கீகாரத்தை எதிர்பார்த்திருக்கும் புத்தகங்களையும் பரிசீலனைக்காக எனக்கு அனுப்பலாம். எனினும், மேற்படி சபை 1.10.73 இற்கு முன் அங்கீகாரத்தை வழங்கினால் மட்டுமே அவை கவனிக்கப்படும்) ;

(iii) இந்த ஒழுங்கின்படி கொள்வனவு செய்வதற்கென, முன் எச்சமயத்திலும் தெரிந்தெடுக்கப்படாதவையாய் இருத்தல் வேண்டும் ;

(iv) இலங்கையில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

3. புத்தகங்களைச் சமர்ப்பிக்கும்போது கீழ்வரும் நடைமுறையைப் பின்பற்றுதல் வேண்டும் :—

(அ) புத்தகத்தின் இரு பிரதிகளை எனக்கு அனுப்புதல் வேண்டும் ;

(ஆ) மேலுள்ள 2(ii), 2(iii), 2(iv) ஆகிய உப-பந்தி ஒவ்வொன்றிலும் வேண்டப்படும் விபரங்களைக் கொடுத்து, அவை சரியானவை என உறுதி செய்து கையொப்பமிட்டு வெளியீட்டாளர் அனுப்பி வைத்தல் வேண்டும். நூலுக்குரிய விற்கும் விலையையும் தெரிவித்தல் வேண்டும்.

4. கொள்வனவுக்கென்று தெரிந்தெடுத்த நூல்களை அவற்றின் விற்கும் விலையில் 10% கழிவுடன் திணைக்களத்துக்கு விற்பதென வெளியீட்டாளர் ஒருப்படல் வேண்டும்.

5. கொள்வனவு செய்யும் பிரதிகளில் விற்கும் விலையில் 10% ஆகிய மேலும் ஒரு தொகை, என்னால் ஒதுக்கி வைக்கப்பட்டு மீதியே வெளியீட்டாளருக்குக் கொடுக்கப்படும். என்னால் ஒதுக்கி வைக்கப்படும் 10% தொகை புத்தகம் மூலநூலாயின் அதன் ஆசிரியர்க்கும் மொழிபெயர்ப்பாயின் மொழிபெயர்ப்பாளருக்கும் நேரடியாகக் கொடுக்கப்படும்.

டபிள்யூ. டி. சி. மகதந்தில,
கல்வி வெளியீட்டு ஆணையாளர்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
த.பெ. இல. 520,
கொழும்பு 3;
1973 ம் ஆண்டு ஜூலை மீ 01 ந உ.

7-666—20.07.73 ந் திகதிய வர்த்தமானி இல. 69

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுரலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **யூலை** | 6.7.73 | வெள்ளி | 27.6.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 13.7.73 | வெள்ளி | 4.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 20.7.73 | வெள்ளி | 11.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27.7.73 | வெள்ளி | 18.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| **ஓகத்து** | 3.8.73 | வெள்ளி | 25.7.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 1.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 8.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 15.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 22.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 29.8.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 5.9.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 11.9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 19.9.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை, அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.